# அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR **EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS**

# அரையாண்டுத்தேர்வு

## 2024/2025

# தமிழ்

## ஆண்டு 12

நேரம்: 180 மணித்துளிகள்

நாள்: சனிக்கிழமை

மொத்தப்புள்ளிகள்: 100

(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

பக்கங்கள்: 16

சுட்டெண் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

# பகுதி 1 - எழுதுதல்

**1** **மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. வினாவெழுத்துகளைப் பெற்றுவந்த சொற்கள்
   1. அவனா, அது
   2. ஏன், இவனால்
   3. என், யான்
   4. இவளா, யாருக்கு

2. எழுத்து, சொல் ஆகிய இரண்டு அதிகாரங்களையும் கொண்ட இலக்கண நூல்
   1. சிலப்பதிகாரம்
   2. நன்னூல்
   3. தண்டியலங்காரம்
   4. நற்றிணை

3. குன்றும்குழியுமான பாதையில் மெல்லமெல்ல நடந்தார்கள். இதில் இணைமொழி
   1. அவர்கள்
   2. மெல்லமெல்ல
   3. குன்றும்குழியும்
   4. பாதையில்

4. "மன்னனும் மாசறக் கற்றோனும்" இதில் மாசு என்பது
   1. குற்றம்
   2. அறிவு
   3. தூய்மை
   4. ஐயம்

5. வினைப்பகுசொல்லில் பால் காட்டும் உறுப்பு
   1. பகுதி
   2. விகுதி
   3. இடைநிலை
   4. சாரியை

6. வன்றொடர்க் குற்றியலுகரம்
   1. சால்பு
   2. ஆடு
   3. பாக்கு
   4. பஞ்சு

7. குரங்கின் பெண் மந்தி போல ஆட்டின் பெண்
   1. நாகு
   2. கடுவன்
   3. மறி
   4. பெட்டை

8. உரைநடை எழுதும் முறையைத் தமிழுக்கு அறிமுகம் செய்தவர்
   1. யி.யு.போப்
   2. கார்டுவெல்
   3. வீரமாமுனிவர்
   4. கார்லசு மார்க்சு

9. தமிழ்க்கடல் என்பது
   1. சிலேடைஅணி
   2. தற்குறிப்பேற்றஅணி
   3. உவமைஅணி
   4. உருவகஅணி

10. என் தம்பி. இதில் வந்துள்ள தொகை
   1. உவமைத்தொகை
   2. வேற்றுமைத்தொகை
   3. உம்மைத்தொகை
   4. அன்மொழித்தொகை

11. இடம், உள்ளம், மனை எனும் பல பொருள் தரும் ஒரு சொல்
   1. மனம்
   2. பதி
   3. அகம்
   4. வீடு

12. கல் + தோடு என்பதன் புணர்ச்சி வடிவம்
   1. கல்தோடு
   2. கற்றோடு
   3. கல்லுத்தோடு
   4. கற்தோடு

13. தொடக்கத்தில் இந்தியா முழுவதும் நாகரிக வளர்ச்சியுடன் வாழ்ந்தோர்
   1. மராத்தியர்
   2. தெலுங்கர்
   3. கன்னடர்
   4. தமிழர்

14. யி.யு.போப் அவர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்
   1. தேம்பாவணி
   2. திருவாசகம்
   3. சதுரகராதி
   4. சீறாப்புராணம்

15. பெருந்தோட்டங்களில் தொழிலாளர் தேயிலை நட்டனர். இதில் வந்துள்ள ஆகுபெயர்
   1. பொருளாகுபெயர்
   2. தொழிலாகுபெயர்
   3. சினையாகுபெயர்
   4. குணவாகுபெயர்

16. யாப்பு முறைகளுக்கு கட்டுப்பட்டு எழுதப்படும் கவிதை வடிவம்
   1. புதுக்கவிதை
   2. திரையிசை
   3. மரபுக்கவிதை
   4. சொல்லிசை

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|

17. இன்சொல் என்பதன் சொற்பிரிப்பு வடிவம்
    1. இனிமை + சொல்
    2. இன் + சொல்
    3. இனிப்பு + சொல்
    4. இனிய + சொல்

18. என்னுடன் வந்தவரை நான் தவறவிட்டேன். இதில் வந்தவர் என்பது
    1. வினைச்சொல்
    2. தொழிற்பெயர்
    3. வினையாலணையும்பெயர்
    4. சுட்டுப்பெயர்

19. பண்டைத்தமிழரது அகவாழ்வுள் அடங்காதது
    1. இயற்கையைப் பேணல்
    2. விருந்தோம்பல்
    3. போர்
    4. பெரியோரைப் போற்றுதல்

20. நானும் நீயும் அவனும் காற்பந்து
    1. விளையாடினான்
    2. விளையாடினேன்
    3. விளையாடினோம்
    4. விளையாடினீர்கள்

21. நாள்தோறும் நடத்தல் உடல் நலத்துக்கு நனி நன்று. இதில் வந்துள்ள இடைச்சொல்
    1. நனி
    2. நடத்தல்
    3. தோறும்
    4. நன்று

22. திறனாய்வுக் கட்டுரைக்குப் பொருத்தமான தலைப்பு
    1. நான் பார்த்த திரைப்படம்
    2. நான் ஆசிரியரானால்
    3. நான் விரும்பும் தொழில்
    4. கணினி தன் கதை கூறல்

23. கைக்கூ கவிதை வடிவத்தை அறிமுகஞ்செய்த நாடு
    1. இந்தியா
    2. யேர்மனி
    3. யப்பான்
    4. அமெரிக்கா

24. இயற்பெயராக அருண்மொழித்தேவன் என்ற தமிழ்ப்பெயரைக் கொண்ட மன்னன்
    1. இரும்பொறை
    2. இராசராசசோழன்
    3. கரிகாற்சோழன்
    4. இராசேந்திரசோழன்

25. செயப்படுபொருள் குன்றிய வினைச்சொல்
1. பாடினாள்
2. தூக்குகிறான்
3. வைப்பார்கள்
4. நடக்கிறார்

26. கேடில் விழுச்செல்வம் கல்வி என்று திருவள்ளுவர் கூறினார். இச்சொல்லியத்துக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியீடு
1. ஒற்றைமேற்கோட்குறி
2. இரட்டை மேற்கோட்குறி
3. அடைப்புக்குறி
4. காற்புள்ளி

27. நான் வீட்டச் சுத்தி உன்னத் தேடுறன். இச்சொல்லியத்தின் எழுத்துவழக்கு
1. நான் வீட்டைச் சுத்தி உன்னத் தேடுகிறேன்.
2. நான் வீட்டைச் சுற்றி உன்னத் தேடுகிறேன்.
3. நான் வீட்டைச் சுத்தி உன்னைத் தேடுகிறேன்.
4. நான் வீட்டைச் சுற்றி உன்னைத் தேடுகிறேன்.

28. கிட்டாதாயின் வெட்டென மற. இதில் மற என்பது
1. வியங்கோள் வினை
2. ஏவல்வினை
3. எச்சவினை
4. குறிப்புவினை

29. "வாய்ப்புகளைத் தவறவிடாதே" என்ற பொருள் தரும் பழமொழி
1. அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை
2. அழுத பிள்ளை பால் குடிக்கும்
3. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்
4. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

30. மக்களுக்காகக் கவிதை பாடும் முறையை உருவாக்கியவர்
1. பாரதியார்
2. மு. மேத்தா
3. கனக சுப்புரத்தினம்
4. வாணிதாசன்

30x1 = 30 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தமிழரது போர் அறங்களாகக் கூறப்படுவனவற்றுள் இரண்டினை எழுதுக.

2. இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஈழத்தமிழரது புதுக்கவிதைகள் எவற்றைக் கருப்பொருள்களாகக் கொண்டிருந்தன?

3. நாட்டைக் காக்கும் போரில் தமிழ்ப்பெண்களது உளவீரத்தைப் புறநானூறு எவ்வாறு பதிவுசெய்துள்ளது?

4. ஆரியரது வருகையால் தமிழரது இறைநெறியில் ஏற்பட்ட மாற்றங்களுள் இரண்டினை எழுதுக.

5. இலக்கியவகைச் சொற்பாகுபாட்டினை எழுதுக.

6. கலப்புச்சொல்லியத்துக்கு எடுத்துக்காட்டு ஒன்று எழுதுக.


7. இணைப்பிடைச்சொற்கள் அமையுமாறு சொல்லியம் ஒன்று எழுதுக.

5x2 = 10 புள்ளிகள்

## 3 தரப்பட்டுள்ளனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுக.

1. "தமிழால் இணைவோம்" என்ற தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.

2. படத்துக்கான கவிதையை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.



3. பாடலுக்கான பொருளுரையை எழுதுக.

ஒரு நாளில் வாழ்க்கை
எங்கும் ஓடிப் போகாது
மறுநாளும் வந்துவிட்டால்
துன்பம் தேயும் தொடராது
எத்தனை கோடி கண்ணீர்
மண் மீது விழுந்திருக்கும்
அத்தனை கண்ட பின்னும்
பூமி இங்கு பூப்பூத்திருக்கும்

- கவிஞர் நா. முத்துக்குமார்

10 புள்ளிகள்

## 4 தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து, அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.

கல்வெட்டுகளும் அகழாய்வுகளும் தமிழரது தொன்மையை உலகத்துக்குக் காட்டி நின்றாலும், தமிழ்மொழியினது தொன்மையை எவரும் கணித்துக் கூறுவதற்கில்லை. "வையக மொழிகளுள் மூத்தமொழி தமிழ்" என்று மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் அவர்கள் நிறுவியுள்ளார். தமிழினம் அவ்வப்போது தனது வரலாறுகளைப் பேணத்தவறியது. இதனால், தமிழின் தொன்மையைத் தங்கள் அறிவின் அளவுகோல் கொண்டு அளக்க முற்பட்டனர் மற்றையோர். தமிழ்ச்சான்றோர் படைத்த செய்யுள்களுக்கு உரை எழுதிய பெரும்பான்மையோர் அதன் கருப்பொருளைத் திரிபுபடுத்தினர்; மொழியால் ஒன்றுபட்டு நின்ற இனத்தைப் பிளவுபடுத்தினர்; அதுவே தமிழர் வரலாறு என்று நிலைநிறுத்தினர். மாந்த இனத்துக்கே அறக்கருத்துகளைத் தந்த வள்ளுவரது திருக்குறள் உலக மொழிகள் பலவற்றுள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மொழியியல் அறிஞர்கள் சங்ககால நூல்களும் அதன் பின் தோன்றிய நூல்களும் கொண்டுள்ள செய்யுள் வகைகளை விதந்து பாராட்டுகின்றனர். இத்தாலி நாட்டிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்து, தமிழின் தொன்மையையும் செழுமையையும் உணர்ந்து, தெளிவுறக் கற்று, "வீரமாமுனிவர்" என்னும் தமிழ்ப்பெயரைச் சூட்டிக்கொண்டார் பெசுக்கிப் பாதிரியார். இவற்றை அறிந்திருந்தும் எமது மொழியை, கலையை, பண்பாட்டைப் பேணுவதில் எமக்கு ஏனோ தயக்கம்! பன்மொழிப் புலமை கொண்ட எம் போன்ற இளையவர்கள் இப்போது சிந்திக்கத் தொடங்கியிருப்பது பெருந்திருப்பம். இத்திருப்பத்தை வளரவிட்டால், பார் ஆண்ட இனமொன்றின் வீரவரலாறும் மொழிவழி ஆளுமையும் மீள் எழுச்சி பெறும் என்பதாலேயே நாம் எழும்போதெல்லாம் அடக்கப்படுகின்றோம். ஆண்ட தமிழினம் மீண்டும் ஆளும் நிலையை உருவாக்க இளையோர் நாம் உறுதி கொள்வோம்.

10 புள்ளிகள்

## 5 தரப்பட்டுள்ள உரைப்பகுதியை உங்கள் வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

**தமிழ்:**

ஐரோப்பாவில் கடுமையான பனிப்பொழிவினால் போக்குவரத்துகள் பாதிப்படைந்துள்ளன. தொடருந்து, விண்ணுந்து போன்ற பொதுப்போக்குவரத்து உந்துகளைப் பயன்படுத்துவோர் பல்வேறு இடர்களை எதிர்கொண்டுள்ளனர். பல நாடுகளில் விண்ணுந்துப் பயணங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால், விண்ணுந்துப் பயணிகளுக்கு ஏற்படும் இடர்களைப் போக்குவதற்கு அந்தந்த நாட்டு அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அவர்களுக்கான தங்குமிடத்தை ஏற்பாடு செய்யும் பொறுப்பு அந்தந்த விண்ணுந்து நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான செலவில் ஒரு பகுதியை அரசு ஏற்றுக்கொள்வதாக அறிவித்துள்ளது.

**வாழிடமொழி:**

10 புள்ளிகள்

## 6 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. பண்டைத்தமிழர் வாழ்வியல்
2. புதுக்கவிதை
3. நீங்கள் கலந்துகொண்ட பண்பாட்டுவிழா பற்றிய உரையாடல்
4. விளம்பரங்களால் ஈர்க்கப்படும் இளந்தலைமுறை

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- விளம்பரங்களும் வணிகமும்
- கையாளப்படும் உத்திகள்
- அவற்றால் இளந்தலைமுறை ஈர்க்கப்படுவது நன்மையா தீமையா என்பது பற்றிய உமது கருத்துகள்

15 புள்ளிகள்

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

ஈழத்தமிழரது உழைப்பால் பன்மொழி நூல்களைப் படித்தறியக் கூடிய இடமாகப் பன்னாட்டளவில் பேசப்பட்ட யாழ்ப்பாண நூலகம், 1981 யூன் 1ஆம் நாள் சிங்கள அரசால் திட்டமிட்டு எரிக்கப்பட்டது. கொழுந்து விட்டு எரிந்த தீயில் அங்கிருந்த ஏட்டுச் சுவடிகளும் நூல்களும் கையெழுத்து மூலங்களும் எரிந்து சாம்பலாகின. அன்றைய அரசு யாழ்ப்பாண நூலகத்தை எரித்து நாற்பதாண்டுகளாகிய நிலையிலும், அச்செயலைப் புரிந்தவர்கள் யாரும் இன்றுவரை நீதியின் முன் நிறுத்தப்படவில்லை. இதனைவிட, தமிழினத்தின் மீது நடத்தப்பட்ட போரின்போது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களாலும் நிலப்பறிப்புகளாலும் இடப்பெயர்வுகளாலும் பள்ளி நூலகங்கள், சிற்றூர் வாசிகசாலைகள், தனிப்பட்ட வகையில் மக்களால் சேர்க்கப்பட்ட நூல்கள் எனப் பல நூறாயிரம் நூல்களும் ஆவணங்களும் திட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ளன. இதனால், தமிழரே ஈழத்தின் தொன்மைக் குடிகள் என்பதையும் தமிழர் ஈழம் முழுவதும் பரந்து வாழ்ந்ததையும் உறுதிப்படுத்த வல்ல ஆவணங்கள் அழிக்கப்பட்டுள்ளன. பன்மொழிப் புலமையுடன் புலம்பெயர் நாடுகளிலே வாழ்ந்து வரும் இளையவர்களாகிய நாம், எமது வாழிடநாட்டு நூலகங்களிலே காணப்படும் தமிழர் வரலாறுகள் சார்ந்த பிறமொழி நூல்களையும் பிற இனத்தவரது பயணக் குறிப்புகளையும் தேடிப்பெற்றுப் படிப்போம். அவற்றை ஆவணப்படுத்துவோம். மின்னியல் ஊடாகப் பதிவேற்றி, அவற்றை அனைவரும் அறியச்செய்வோம்.

1. யாழ்ப்பாண நூலகம் பன்னாட்டளவில் பேசப்பட்டமைக்கான காரணம் என்ன?

1 புள்ளி

________________________________________

2. புலம்பெயர் நாடுகளிலே வாழும் இளையோர் எவற்றைத் தேடிப்படிக்க வேண்டும்?

2 புள்ளிகள்

________________________________________

3. அவற்றை அனைவரும் அறிய யாது செய்யவேண்டும்? 2 புள்ளிகள்

________________________________________

4. யாழ்ப்பாண நூலக எரிப்பால் எரிந்தவை எவை? 2 புள்ளிகள்

________________________________________

________________________________________

5. எவற்றை உறுதிப்படுத்தவல்ல ஆவணங்கள் அழிக்கப்பட்டன? 2 புள்ளிகள்

________________________________________

________________________________________

9 புள்ளிகள்

**2. தரப்பட்டுள்ள உரைப்பகுதிகளை வாசித்து, அவற்றுக்கு மிகப்பொருத்தமான தலைப்பைத் தெரிவுசெய்து எழுதுக.**

**(ஒரு தலைப்பை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தலாம்)**

## தலைப்புகள்:

- அறிவியல் வளர்ச்சியும் மாந்த வாழ்வும்
- இணையத்தளமும் வாய்ப்புகளும்
- அறிவியல் வளர்ச்சியும் போக்குவரத்தும்
- தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி

அ. ________________________________________

இன்று உலகம் இயங்குவதற்கு அடிப்படைத் தேவையானது 'தகவல் தொடர்பு' என்பது மறுக்கமுடியாத உண்மை. இதில் ஊடகங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. தொழில்நுட்ப வளர்ச்சி தகவல் பரிமாற்றத்துறையில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. ஒரே நேரத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு மிக விரைவாகச் செய்திகளைத் தெரிவிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஆ ________________________________________

இணையத்தளம் என்னும் இணையற்ற தொழில்நுட்பம் உலகம் முழுவதிலுமுள்ள தகவல்களையும் பொழுதுபோக்குகளையும் நாமே தேடிப்பெற வகைசெய்கிறது. குரல் ஒலி, அச்சிட்ட ஆவணங்கள், ஒளிப்படங்கள் போன்றவற்றை ஒருங்கிணைத்து எந்நேரத்திலும் எந்த இடத்திலும் தகவல்களைப் பெறும் வகையில் இணையத்தளமானது தொழில்நுட்பம் நிறைந்ததாகப் பணியாற்றுகிறது. இதனைத் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் உச்சம் எனலாம்.

இ ________________________________________

மாந்த வாழ்க்கைக்கு வசதிகள் பலவற்றை உருவாக்கித் தந்து வளமாக வாழ வைப்பதில் முன்னிற்பது அறிவியலே. தொலைத்தொடர்பு ஊடகங்கள் முதல் போக்குவரத்துப் பொறிகள் வரை அனைத்திலும் அறிவியல் முதன்மை செலுத்துகிறது. அறிவியல் வளர்ச்சி ஏற்படாவிட்டால் மாந்தனால் பலவற்றை எதிர்க்கவும் முடியாது, செயற்படுத்தவும் முடியாது.

3 x2 = 6 புள்ளிகள்

## பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|

**எழுதுதல்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 15 | | | |

**வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 09 | | | |
| 2 | 06 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |